# வரவு-செலவுத் திட்டத்தின் சிறப்புக்கூறுகள் 2011 - 12

## திட்டம்

❖ 2011-12ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டம் ₹ 4,830 கோடியாகும். இதில் திட்டஒதுக்கீடு ₹ 2,750 கோடியும், திட்டமில்லா இனச் செலவிற்காக ₹ 2,020 கோடியும், மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்டங்களுக்கு ₹ 60 கோடியும் அடங்கும்.

## வேளாண்மை

❖ RIDFயிடமிருந்து நிதி உதவி பெற்று தட்டாஞ்சாவடி, மதகடிப்பட்டு, கன்னியக்கோயில், கரையாம்புத்தூர் மற்றும் காரைக்கால் ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கூடுதலாக கிடங்குகள் அமைக்கப்படும்.

❖ நெல் விதை உற்பத்தியை மேம்படுத்த தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அளிக்கும் வகையில், விதைகளை சேமிக்க ஆறு கிராமங்களில் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

❖ புதுவையில் 3 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்கப்பட்டு கரும்பு ஆலையின் மூலமாக விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் வாடகைக்கு விடப்படும்.

❖ காரைக்கால் பகுதியில் நெல் நடும் இயந்திரம் மற்றும் நெல் அறுவடை இயந்திரம் வாங்கப்பட்டு 50 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும்.

❖ பயிறுவகைகள் சாகுபடி பரப்பளவை அதிகப்படுத்த அறுவடைக்கு பிந்தைய மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு ₹ 5,000 வழங்கப்படும்.

❖ வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள பயிர் சார்ந்த குழுக்களுக்கு 75 விழுக்காடு மானிய விலையில் இயந்திரங்கள் வழங்கப்படும்.

**கால்நடைப் பராமரிப்பு**

- ❖ இந்த நிதி ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 2,510 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வாங்க 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.
- ❖ வேலைவாய்ப்பற்ற 105 அட்டவணை இன பயனாளிகளுக்கு பால் பண்ணை அமைக்க 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். மேலும் 90 அட்டவணை இனத்து விதவைப் பெண்களுக்கு சிறு பால்பண்ணை அமைக்க 100 விழுக்காடு மானியம் வழங்கப்பட உள்ளது.
- ❖ தேசிய வேளாண் வளர்ப்பு திட்டத்தின்கீழ் (RKVY) படித்த வேலைவாய்ப்பற்ற 400 பயனாளிகள் சுய வேலைவாய்ப்பு பெறும் வகையில், சிறு பால்பண்ணை அமைக்க 75 விழுக்காடு மானிய உதவி வழங்கப்படும். இதில் 20 விழுக்காடு அட்டவணை இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
- ❖ இறைச்சி உற்பத்தியை அதிகப்படுத்தும் வகையில், இந்த நிதி ஆண்டில்



வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 408 அட்டவணை இன பயனாளிகளுக்கு 5 பெட்டை ஆடுகளும் 1 கிடா ஆடும் வாங்குவதற்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

- ❖ கோழி வளர்ப்பின் மூலம், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை பெருக்கும் வகையில் 30,000 (இரு வகை பயன்பாட்டிற்கேற்ற) கிரிராஜா கோழிக்குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.
- ❖ வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 3,000 பயனாளிகளுக்கு முட்டை இன கோழிகள் ஐந்து இலவசமாக வழங்கப்படும். மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பயனாளிகளுக்கு 6 வார வயதுடைய 5,000 வான்கோழி குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

**மீன்வளம்**

❖ நடப்பு ஆண்டிலிருந்து மீன்பிடி படகுகளின் காப்பீட்டுத் தொகை முழுவதையும் அரசே காப்பீட்டு நிறுவனங்களுக்கு நேரடியாக செலுத்தும்.

❖ கடல் மற்றும் நீர்நிலைகளில் மீன்பிடிக்கும்போது, இறக்க நேரிடும் மீனவரின் குடும்பத்துக்கு, மத்திய அரசு காப்பீட்டுத் தொகையாக அளிக்கும் ₹ 1 இலட்சம் தொகையுடன், மாநில அரசு ₹ 2 இலட்சம் அளிக்கும். காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு ₹ 1.50 இலட்சம் அளிக்கப்படும்.

❖ மீனவர்களுக்கு அளிக்கப்படும் மாத ஓய்வூதியம் ₹ 900லிருந்து ₹ 1,150 ஆக உயர்த்தப்படும்.

❖ விசைப்படகு ஒன்று வாங்க அதிகபட்சமாக வழங்கப்படும் மானியம் ₹ 11 இலட்சத்திலிருந்து ₹ 13 இலட்சமாக உயர்த்தப்படும். அதேபோல் மர விசைப்படகுக்கு தற்போது வழங்கப்படும் அதிகபட்ச மானியத்தொகை ₹ 7.50



இலட்சத்திலிருந்து ₹ 8.50 இலட்சமாக உயர்த்தப்படும். FRP படகுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத்தொகை ₹ 75,000லிருந்து ₹ 1 இலட்சமாக உயர்த்தப்படும்.

❖ 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வில் 75 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு தற்சமயம் வழங்கப்படும் ஊக்கத் தொகையான ₹ 4,000 மற்றும் ₹ 6,000த்தை இந்த ஆண்டு முதல் முறையே ₹ 5,000 மற்றும் ₹ 7,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

❖ இரும்பு / மர மற்றும் FRP விசைப்படகுகளை பராமரிப்பதற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் தொகையான ₹ 20,000 மற்றும் ₹ 10,000 வரும் நிதி ஆண்டு முதல் முறையே ₹ 30,000 மற்றும் ₹ 15,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

❖ மண்ணெண்ணெயினால் இயங்கக்கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு

ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்க்கு ₹ 25 மானியமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கூட்டுறவு**

- ❖ கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்களால் பெறப்பட்ட கடன்களின் மீதான வட்டி மற்றும் அபராத வட்டிகளை தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ❖ குறைந்த வருவாய் பிரிவினர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் பெறப்பட்ட தவணை கடந்த அசல் ₹ 1 இலட்சம் வரை தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ❖ பாலுக்கு ஆதரவு விலையாக லிட்டர் ஒன்றுக்கு ₹ 1 கூடுதலாக ஆரம்ப கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினருக்கு வழங்கப்படும்.



- ❖ நெசவாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்த பட்சம் மற்றும் அதிகபட்சம் ஓய்வூதியம் முறையே ₹ 1,000 மற்றும் ₹ 1,250ஆக உயர்த்தி வழங்கப்படும்.

- ❖ புதுச்சேரியில் “புதுச்சேரி பல்நோக்கு சேவை வழங்கும் கூட்டுறவு சங்கம்” என்னும் ஒரு புதிய சங்கம் துவங்கப்படும்.

- ❖ தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நவீனமயமாக்கப்படும். இதன் மூலம் அரைவைத் திறன் 1,750 டன்னிலிருந்து 3,000 டன்னாக உயர்த்தப்படும்.

- ❖ நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன், துவக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும்.

- ❖ கூட்டுறவு இணையத்தின் மூலம் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மின்விசை**

- ❖ இலாசுப்பேட்டை பகுதியில் 110 / 22 கி.வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.
- ❖ தபால் நிலையம் மற்றும் வங்கிகளின் மூலமாக மின்கட்டணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- ❖ மின்தடங்கலால் வரும் புகார்களை நிவர்த்தி செய்திட, 24 மணி நேரமும் இயங்கும் கணினிமயமாக்கப்பட்ட மையம் ஒன்று அமைக்கப்படும்.
- ❖ மின் பட்டியல் பற்றிய புகார்கள் மற்றும் தவறுகளை குறைத்திடும் வகையில் மின்பட்டியல் கணக்கிட்டு வசூல் செய்ய ஒரு புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும்.

**தகவல் தொழில்நுட்பம்**

- ❖ பிள்ளைச்சாவடியில் பிப்டிக் மூலம் சிறப்பு பொருளாதார மண்டல தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.



**உள்ளாட்சி**

- ❖ புதுச்சேரி நகரப்பகுதியில் 21 சமுதாயக் கூடங்களும், ஊரகப் பகுதியில் 15 சமுதாயக் கூடங்களும் கட்டப்படும். காரைக்கால் ஊரகப் பகுதியில் 16 சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.
- ❖ புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடங்கள் கட்டப்படும்.
- ❖ உழவர்கரை நகராட்சிக்குள் பெரிய அங்காடி ஒன்றும், பொது அங்காடி ஒன்றும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ❖ வில்லியனூரில், புதிய அங்காடி கட்டப்படும். கரியமாணிக்கத்திலுள்ள வெங்கடசுப்பா ரெட்டியார் திருமண மண்டபம் புதிதாக கட்டப்படும்.
- ❖ காரைக்கால் நேரு அங்காடி தனியார் பங்களிப்போடு புதிய கட்டிடம் கட்டப்படும்.

❖ நபார்டு வங்கியிடமிருந்து ஊரக சாலைகளை மேம்படுத்த ₹ 30 கோடி கடன்பெற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ₹ 1 கோடியிலிருந்து ₹ 2 கோடியாக உயர்த்தப்படும்

**நகர மற்றும் கிராம அமைப்பு**

❖ பெருந்தலைவர் காமராஜ் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவித் தொகையான ₹ 1 இலட்சத்தை இந்த நிதி ஆண்டில் இருந்து ₹ 2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் (JNNURM)**

❖ அட்டவணை இனத்தவருக்காக அபிஷேகப்பாக்கம் மற்றும் திம்மநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் 474 வீடுகள் கட்டும் பணி இந்த நிதி ஆண்டில் தொடங்கப்படும்.

❖ அரியாங்குப்பம் மற்றும் முருங்கப்பாக்கம் ஆகிய இடங்களில் ₹ 19.61 கோடி திட்ட மதிப்பீட்டில் 300 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.



**தொழில்கள்**

❖ புதுச்சேரி பகுதியில், 50 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

❖ ஐந்து ஆண்டுகளில் 20,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க, பிப்டிக் மூலம் திறன் மேம்பாட்டு பள்ளிகள் அமைக்கப்படும்.

❖ தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில் போலகத்தில் பல்பொருள் சிறப்புப் பொருளாதார மையம் அமைக்கப்படும்.

❖ புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தொழில் துவங்குவதை ஊக்குவிக்கும் வகையில் சலுகைகள் வழங்க அதாவது ஆண்டுக்கு ₹ 75,000 அளவிற்கு தற்போது வழங்கப்பட்டுவரும் கடனுக்குரிய வட்டிமீதான மானியம் ₹ 5 இலட்சமாக உயர்த்தப்பட்டு 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

❖ அட்டவணை மற்றும் பழங்குடி இன மக்கள் தொழில் தொடங்க ஊக்குவிக்கும் பொருட்டு தற்போது வழங்கப்பட்டுவரும் முதலீட்டு மானியம்

₹ 25 இலட்சத்திலிருந்து ₹ 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

- ❖ அட்டவணை இனத்தோரும், பெண்களும் தொழில் தொடங்க ஏதுவாக புதியதாக அமைக்கப்படும் தொழிற்பேட்டைகளில் 10 விழுக்காடு இடம் இப்பிரிவினருக்கு என ஒதுக்கீடு செய்யப்படும்.
- ❖ காரைக்கால் மாவட்டத்தில் தொழில் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் முன்னுரிமை தொழிற்சாலைகள் தொடங்க முதலீட்டு மானியமாக ₹ 40 இலட்சம்வரை வழங்கப்படும்.

**தொழிலாளர் நலன்**

- ❖ கட்டிட நல வாரியத்தின் மூலமாக கரிக்கலாம்பாக்கத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படும்.
- ❖ பெரும் கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களில் பெண் தொழிலாளர்கள் பயனுறும்



வகையில் அவர்கள் குழந்தைகளுக்கென தற்காலிகமாக குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும்.

- ❖ மருத்துவ கல்லூரிகளில் சேருகின்ற கட்டிட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ₹ 50,000மும், பொறியியல் கல்லூரிகளில் சேருகின்ற குழந்தைகளுக்கு ₹ 25,000மும், பிற கல்லூரிகளில் சேருகின்ற குழைந்தைகளுக்கு ₹ 10,000மும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.
- ❖ கட்டிட தொழிலாளர்கள் மற்றும் அமைப்புச்சாரா நலச்சங்க தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவியாக தற்பொழுது வழங்கப்படுகின்ற ₹ 1,500ஐ ₹ 2,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.
- ❖ கட்டிட தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு ஈமச்சடங்கிற்காக வழங்கப்படுகின்ற நிதி உதவி ₹ 2,000 லிருந்து ₹ 5,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**கல்வி**

- அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் வாரம் மூன்று முட்டைகள் வழங்கப்படும்.
- கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பேருந்து வசதி இலவசமாக அளிக்கப்படும்.
- அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை நடப்புக் கல்வி ஆண்டு முதல் ₹ 250லிருந்து ₹ 500 ஆக உயர்த்தப்படுகிறது.
- அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு புத்தகப்பை இலவசமாக இந்த ஆண்டு வழங்கப்படும்.
- SSA என்ற திட்டத்தின்கீழ் பள்ளிகளில் சுத்திகரிக்கப்பட்ட தரமான குடிநீர் மாணவர்களுக்கு வழங்கப்படும். RMSA என்ற திட்டத்தின்கீழ் மாணவிகளுக்கான பள்ளிக் கழிப்பறை வசதிகளை மேம்படுத்த எனது அரசு முடிவு செய்துள்ளது.



- மதிய உணவுத்திட்டத்தின்கீழ், ஐந்து புதிய மத்திய சமையல் கூடங்கள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் கட்டப்படும்.
- தேசிய திறன் ஆய்வுத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் ஐந்து மாணவர்களுக்கு தலா ₹ 10,000 அளிக்கப் படும். மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படும் 10 மாணவர்களுக்கு தலா ₹ 5,000 அளிக்கப்படும்.
- புதுச்சேரியின் வரலாறு, இலக்கியம், கட்டிடக்கலை, மதம், தத்துவம், கலை மற்றும் பண்பாடு பற்றிய ஒருங்கிணைந்த களஞ்சியத் தொகுப்பை 4 பகுதிகளாக தயாரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.
- சென்டாக் மூலம் இந்த கல்வி ஆண்டு மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் வருமான உச்சவரம்பு ஏதுமின்றி படிப்புதவித் தொகை முறையே ₹ 1.75 இலட்சம் மற்றும் ₹ 25,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சுகாதாரம்

- புதுச்சேரியில் "108" ஆம்புலன்ஸ் வாகன சேவை துவக்கப்படும்.
- பழைய அரசு மகப்பேறு மருத்துவமனையில் சர்க்கரை வியாதிக்கென்று தனியாக ஒரு சிகிச்சை பிரிவு தொடங்கப்படும்.
- காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் மாதிரி பரிசோதனைக்கூடம் ஒன்று அமைக்கப்படும்.
- பாகூர், அரியாங்குப்பம், தவளக்குப்பம், காலாப்பட்டு, கரிக்கலாம்பாக்கம், நெடுங்காடு மற்றும் சாலக்கரா ஆகிய இடங்களில் புதிய ஹோமியோபதி சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.
- புதுச்சேரியில் யுனானி சிகிச்சைப் பிரிவும் மற்றும் புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் யோகா மற்றும் இயற்கை வைத்திய சிகிச்சைப் பிரிவுகளும் அமைக்கப்படும்.



## பொதுப்பணிகள்

- புதுச்சேரி நகரப் பகுதி முழுவதும் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணி, ₹ 70 கோடி செலவில் துவங்க உள்ளது.
- ஊசுட்டேரி தண்ணீரை சுத்திகரித்து நகரப் பகுதிக்கு வழங்கும் திட்டம் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.
- திருமலைராஜனார் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.
- கடலூர் புறவழிச்சாலை மற்றும் அரும்பார்த்தபுரத்தில் இருப்புப் பாதையின்மேல் மேம்பாலம் கட்டும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.
- சாரம் காமராஜர் சாலை–லெனின்வீதி சந்திப்பில் உள்ள பாலம் அகலப்படுத்தப்படும்.
- சட்டப்பேரவைக்கான புதிய கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்படும்.



á

- ❖ புதுச்சேரியில் காமராஜர் மணிமண்டபம் கட்டுமானப் பணியும் கருத்தரங்க மையம் கட்டும் பணியும் துவங்கப்படும்.
- ❖ புதிய நீதிமன்ற வளாகத்தில் சமரசத்தீர்வு மையம் மற்றும் இலவச சட்ட உதவி மையம் உள்ளடக்கிய பொது வசதிகள் கொண்ட கட்டிட வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.
- ❖ காரைக்கால் பகுதியில் நபார்டு கடன் உதவியுடன் 16 ஊரக சாலைகள் மேம்படுத்தப்படும்.
- ❖ காரைக்கால் நகரப் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் புதிதாக மாற்றி அமைத்து குடிநீர் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- ❖ புதுத்துறை அருகில் ஆற்று நீரை சுத்தப்படுத்தி குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.
- ❖ காரைக்கால் பகுதியில் சிற்றேரிகள் அமைத்து நீர் தேக்கப்படும். மேலும் ஆறு மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு செப்பனிடப்படும்.



**போக்குவரத்து**

- ❖ புதுச்சேரியிலிருந்து பெங்களூரு, மாஹே மற்றும் கொல்லூர் ஆகிய வழித்தடங்களில், புதிய பேருந்துகள் PRTC மூலம் இயக்கப்படும்.
- ❖ மாஹேயிலிருந்து மைசூர் மற்றும் கொல்லூர் ஆகிய வழித்தடங்களில் புதிய பேருந்துகளை PRTC மூலம் இயக்கப்படும்.
- ❖ காரைக்கால் – திருநள்ளார் – திருக்கடையூர் – சீர்காழி இடையே அகல இரயில்பாதைத் திட்டத்தை செயல்படுத்த இரயில்வே துறையுடன் கலந்தாலோசனை செய்து உளரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**சுற்றுலா**

- ❖ சுண்ணாம்பாறு உப்பங்கழி, ஊசுட்டேரி மற்றும் காரைக்கால் அரசலாறு ஆகிய இடங்களில் படகு வீடுகள் மற்றும் நவீன நீர்விளையாட்டுக் கருவிகளை அறிமுகப்படுத்தப்படும்.

- ❖ சுண்ணாம்பாற்றில் உள்ள உல்லாச தீவிற்கும், குடில்களுக்கும் மின்சார வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ஆலங்குப்பம் கிராமத்தில் கைவினைக் கண்காட்சியுடன் கூடிய விற்பனை மையம் மற்றும் குடில்களுடன் கூடிய உணவகம் அமைக்கப்படும்.
- ❖ புதுச்சேரி உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் பயிலும் இந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு மணவர்களுக்கு கல்விக்கட்டண விலக்கு அளிக்கப்படும்.
- ❖ புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாமில் அனைத்து நுழைவு வாயில்களிலும் சுற்றுலா தகவல் மையங்கள் அமைக்கப்படும்.

**ஆதி திராவிடர் நலம்**

- ❖ பொறியியல் மற்றும் M.C.A. படிக்கும் அட்டவணை இனத்து மாணவர்களுக்கு மடிக்கணினி (Laptop) இலவசமாக வழங்கப்படும்.



- ❖ இந்த நிதி ஆண்டில் 10,000 அட்டவணை இனத்தைச்சார்ந்த குடும்பங்களுக்கு சலவை இயந்திரம் (Washing Machine) இலவசமாக வழங்கப்படும்.
- ❖ ஏற்கனவே அரசு மானிய உதவியுடன் கட்டப்பட்டு தற்போது சேதமடைந்த நிலையில் உள்ள 1,600 வீடுகள் புதுப்பிக்க இராஜீவ் காந்தி வீடுகட்டும் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.
- ❖ புதுவை ஊரகப் பகுதிகளில் 1,689 வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் காரைக்கால் பகுதியில் 570 வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்படும்.
- ❖ கிருஷ்ணா நகரில் ₹ 4 கோடி செலவில் அட்டவணை இனத்து மாணவிகளுக்கான விடுதி ஒன்று கட்டப்படும்.

**சமூக நலம்**

- ❖ மாற்றுத்திறனாளிக்கான மறுவாழ்வு மையத்தில் வாழ்க்கைத் தொழில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ₹ 800லிருந்து ₹ 1,000 மாக உயர்த்தப்படும்.

❖ ஒரு மாற்றுத்திறனாளி மற்றொரு மாற்றுத் திறனாளியை மணந்தால் ₹ 50,000 திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

❖ மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியம் பின்வருமாறு உயர்த்தப்படுகிறது.

| ஊன விழுக்காடு | ஓய்வூதியம் |
|---|---|
| | ₹ |
| 40-65 | 1,100 |
| 66-85 | 1,400 |
| 86-100 | 1,750 |

**மகளிர் மற்றும் சிறார் நலம்**

❖ விதவைகள் மறுமண ஊக்கத்தொகை நடப்பாண்டிலிருந்து ₹ 20,000லிருந்து ₹ 50,000 ஆக உயர்த்தப்படும்.

**குடிமைப்பொருள்**

❖ நடைமுறையில் உள்ள மஞ்சள் நிற அட்டைகள் களஆய்வு செய்யப்பட்டபின் தகுதியான வர்களுக்கு சிகப்பு நிற அட்டைகளாக மாற்றி அளிக்கப்படும்.



❖ அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கும்போது சந்தைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட ஒரு நிதியம் அமைத்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**பொது**

❖ T.R. பட்டினம், போலகத்தில் வேதிப்பொருள் மற்றும் வாயு தீயணைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ காரைக்காலில் முதற்கட்டமாக ஒரு புதிய ஆட்சியர் அலுவலக வளாகம் விரைவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

❖ பதிவு செய்யப்பட்ட பல்வேறு பள்ளிவாசல்களின் உலிமாக்களுக்கு (Ulemas) மாதமொன்றுக்கு ₹ 1,000 உதவித் தொகை அளிக்கும் உலிமாக்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் இந்த நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

- புதுச்சேரியில் உள்ள புகழ்பெற்ற சித்தர் பீடங்களுக்கு நிதி உதவி அளித்து பராமரிக்கப்படும்.

- புதுச்சேரியில் உள்ள முக்கிய கோயில்களுக்கு புனருத்தாரணம் செய்ய அரசு நிதியளிக்க உத்தேசித்துள்ளது.

- மின்-ஆளுகை செயற் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டின்போது மின்-முத்திரையிடும் முறையை அறிமுகப்படுத்தும்.

* * *